நலிந்த கலைஞர்களுக்கு இந்த ஆண்டு முதல்

# கூடுதலாக 2500 கலைஞர்களுக்கு மாதம் ரூ.3000 நிதியுதவி - ஆணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப்.7-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் சார்பாக, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக நலிந்த கலைஞர்களுக்கு மாதம் தோறும் 3,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 6,542 நலிந்த கலைஞர்கள் மாதம் தோறும் 3,000ரூபாய்நிதியுதவிபெற்றுபயனடைந்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் வகையில், 2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.


அதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட, தகுதிவாய்ந்த 2,500 நலிவுற்றநிலையில்வாழும்கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.9.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நலிந்த கலை ஞர்களுக்குநிதியுதவிவழங்கும்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். க.மணிவாசன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி. கவிதாராமு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





திருச்செந்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகராட்சி ஆய்வுக் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத்தலைவர் சிவ ஆனந்திரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் மணல்மேடு சுதாகர், ஆனந்த், செந்தில் மற்றும் பலர், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் மரம் நடும் நிகழ்வினை சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்

# மேலவெள்ளூர் ஏ.ஆர்.கே.தேவதாஸ் இல்லத் திருமணம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. செப். 7 –

சிவகங்கை மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.ஆர்.கே. தேவதாஸ் – தே. விசாலாட்சி ஆகியோரின் புதல்வர் ஆர்.கே.டி.செண்பகராஜ்–க்கும் திருப்புவனம் ஒன்றிய கவுன்சிலர் அ.ஈஸ்வரன் – ஈ.ஈஸ்வரி ஆகியோரின் புதல்வி ஏ.இ. தர்ஷணாவுக்கும் திருமணம் இன்று (07.09.2025 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.45 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வேலம்மாள் மெட்ரிக் பள்ளி அருகில் உள்ள வேலம்மாள் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்ட துணைச் செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவினை மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆ. தமிழரசி ரவிக்குமார், கார்த்திக் ப.சிதம்பரம் எம்.பி., முரசொலி செய்தியாசிரியர் கு.சேது, எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். கார்த்திகேய சிவசேனாபதி, வசந்தி சேங்கைமாறன், ஏ.பி. ஆர். ரகுபதி, எஸ்.மோகன் குமார், பொன்.மு.சேது ராமலிங்கம், ஜி.காந்தையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



இம்மணவிழாவில் அ. கணேசன், ஜோன்ஸ் ரூசோ, மேயர் சே. முத்து துரை, நா. குணசேகரன், பா. சின்னையா, நாகனி பா. செந்தில் குமார், கே. இராமகிருஷ்ணன், சி. பூரண சங் சீதா, வி.குமரேசன், வி. பிரபாவதி, எல்.பாலசுப்பிரமணியம், கே.கே.பாலதண்டாயுதம், எஸ். சிவதேவ்குமார், என். தம்பிபாலன், ஆர். ராமநாதன், என். சிவக்குமார், என். பனையப்பன், கே. சுப்பிரமணியன், தா. இராமையா, குரு. சிங்காரவேலன், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, தெய்வாணை இளமாறன், தமிழ் பிரியா வேங்கை பிரபாகரன், பொன்.மணிமாறன், எஸ்.பி.சரவணன், சரவணா புவனேஸ்வரி, கே. ஜெயவேல், கார்மேகம் செல்வி, அ. மணிமுத்து, கே.சூர்ய கலாநிதி, பா.பாலரவிராஜன், எம். பாண்டித்துரை, பி.கார்த்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

எஸ்.மகேந்திரன், பொன். இளங்கோவன், எஸ்.சுப்பையா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தஞ்சாவூர் மத்திய மாவட்டம் ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி கன்னுக்குடி மேற்கு ஊராட்சி ஆதிதிராவிடர் தெரு தி.மு.க.கிளை கழக செயலாளர் எஸ்.சத்தியமூர்த்தி மறைவையொட்டி தலைமை பொதுக்குழு உறுப்பினரும் மாவட்ட கவுன்சிலருமான திராவிட.கதிரவனும், மாவட்டப் பிரதிநிதி சு.வெங்கடேஸ்வரனும் அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினர். இந்நிகழ்வில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அப்பாத்துரை, கிளை கழக செயலாளர் அப்பாத்துரை, ஒன்றிய பிரதிநிதி சூரியபிரகாசம், மு.கிளை கழக செயலாளர் தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.